1971 ஜூலை 24]

திரு. செ. சதாசிவம்: பென்னடம் அருகே உள்ள சுகர் பாக்டரிக்கு திருச்சி மாவட்டத்திலே இருந்து கரும்பு கொண்டு வரும் வகையிலும், தஞ்சாவூர்—தென்னர்க்காடு பாதையை சுலப மாக்கும் வகையிலும், பென்னடம் அருகே உள்ள வெள்ளாற்றிலே பாலம் கட்ட இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போடவும்.

வேலூர்—ராணிப்பேட்டை சாலையில் விஷாரத்தில் பைபாஸ் ரோட்

* 430 வின—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

வேலூர்—ராணிப்பேட்டை சாலையில் விஷாரத்தில் பஸ் போக்குவரத்துக்கு பைபாஸ் ரோட் (Bye-pass road) போடப் படும் திட்டம் எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த வேலை அக்டோபர் 15-ந் தேதி அளவில் முடிக்கப்படலாம்.

திரு. நா. வீராசாமி: வேலூர்—ராணிப்பேட்டை சாலையிலே இரண்டு மைலுக்கு ஒரு ஊர் இருக்கிறது. அந்த 16 மைல் தூரத் திலே 16 வளைவுகள் இருக்கின்றன. இப்படி அரசாங்கம் ஒரு பைபாஸ் ரோட்டை போடுவதற்கு பதிலாக, வேறு ஒரு புதிய ரோட்டையே ஏன் போடக்கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பொழுது இந்த பைபாஸ் ரோட்தான் முடியும் தருவாயில் இருக்கிறது. அதை விட்டு புதிய ரோடு போட வேண்டுமென்றல், அதிலே கஷ்டங்கள் ஏற்படும். எப்படியும் உறுப்பினரின் கருத்து பரிசிலிக்கப்பட்டு, காரியங்கள் ஆற்றப்படும்.

மதுரை—தொண்டிச் சாலையிலிருந்து ஆனந்தூர் செல்லும் சாலை

* 431 வின—திரு. வீ. மலைக்கண்ணன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—தொண்டிச் சாலையிலிருந்து பிரிந்து ஆனந்தூர் செல்லும் சாலையில் மெட்டல் பரப்பி பாலங்கள் அமைத்து பரா மரிப்புச் செய்து தரும்படி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. மலைக்கண்ணன்: தலைவரவர்களே, இந்தச் சாலை 10 ஆண்டுகளுக்கு முன்னல் இந்த அரசாங்கத்தினல் ஏற்றுக்கொள்ளப் பட்டு பஸ்ஸுகள் போய் வருகின்றன. இருந்தாலும், அந்தச் சாலை யிலே பாலம் கட்டப்படாமலும், மெட்டல் பரப்பப்படாமலும் இருப்பதால், பஸ்கள் போக்குவரத்திற்கு பாதகம் ஏற்படுகிறது. அதை நல்ல பாதையாக செய்ய, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தச் சாலையை 1960–61-ம் ஆண்டில் பராமரிப்பதற்காக "பேருந்து சாலை திட்டத்தின் கீழ்", மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த சாலையிலே மெட்டல் பரப்ப வேண்டும் என்பதுதான் கோரிக்கை. இதற்கு 6½ லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிருர்கள். நிதி வசதியைப் பொறுத்து, காரியங்கள் விரைவாக தொடங்கப்படும்.

வெளி மாநிலங்களிலிருந்து கதர் வரவு.

* 432 வின—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு தற்போது வெளி மாநிலத்தில் இருந்து கதர் வரவழைக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) தமிழகத்தில், கதர் உற்பத்தி, கதர் விற்பனை இரண்டிலும், கதர் கிராமத் தொழில் வாரியம் ஈடுபட்டுள்ளது. விற்பனையின் தேவைக்கேற்ப, தமிழ் நாட்டில் உற்பத்தியாகாத கதர் ரகங்களை, வெளி மாநிலக் கதர் நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டியது அவசியமாகவுள்ளது. படுக்கை விரிப்புகள், சமக்காளம், மேலங்கித் துணிகள் போன்ற மிகத் திண்ணிய ரகக் கதர், மிகவும் மெல்லிய கதர், கதர்பட்டு, கம்பளி ரகங்கள் முதலியன வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, ஜமக்காளம், படுக்கை விரிப்புக்களை வெளி மாநிலத்திலே இருந்து வரவழைப்பது நம்முடைய மாநிலத்திலே உள்ள கைத்தறி தொழிலாளர்களை பாதிக்கும் என்று சொல்லுகிருர்கள். எனவே, அதை எல்லாம் மாற்றி அமைக்கக் கூடிய அளவிலே, கைத்தறி ஜமக்காளம், படுக்கை விரிப்பு போன்றவைகளை பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ பண்டிகைகளின் போது மக்கள் வாங்கி அணியச் செய்ய வேண்டும் என்று ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் இந்த அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: உறுப்பினர் அவர்கள் கைத்தறியைப் பற்றி சொல்லுகிருர்கள். இது கதர் பற்றிய வின. கைத்தறித் துணிகள் நல்ல முறையிலே விற்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இந்த அரசாங்கத்